பிரஸார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

24 06 2024 Monday 6 30 Pm

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- கள்ளக்குறிச்சி, கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.
- அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று, தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் கல்விச் செலவினை அரசே ஏற்றுக் கொள்ளும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.
- நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் நாளை கன முதல் மிககனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>><<<<

மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கான சீர்திருத்த நடவடிக்கைகளை தமது அரசு செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் காரணமாக, வீட்டு உபயோகப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது ஏழை மக்களுக்கு, சேமிப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி, கள்ளச்சாராய சம்பவம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட — முருகன் 45 செகண்ட்ஸ்)

>>>><<<<

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராய சம்பவத்தை கண்டித்து அஇஅதிமுக சார்பில் மாநிலம் முழுவதும் இன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

கள்ளக்குறிச்சியில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு. எடப்பாடி பழனிசாமி, இந்த சம்பவத்திற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தமது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பிஜேபி சார்பில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை தலைமையில் மூத்த நிர்வாகிகள், மாநில ஆளுநர் திரு. ஆர்.என். ரவியை சந்தித்து, இச்சம்பவம் தொடர்பாக கோரிக்கை மனு ஒன்றை அளித்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய இக்குழுவில் இடம்பெற்ற பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன், இந்த சம்பவம் குறித்த விசாரணை, சிபிஐக்கு மாற்றப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

சிபிசிஐடி விசாரணையில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.

>>>><<<<

அரசு பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்று, நம் நாட்டில் செயல்பட்டு வரும் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் மாணவர்களின் கல்விச் செலவினை அரசே ஏற்றுக் கொள்ளும் என்று பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

இன்று பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து பேசுகையில் அவர் இதற்கான அறிவிப்பினை வெளியிட்டார்.

பட்டயக் கணக்காளர் அடிப்படை தேர்வுக்கான புத்தகங்கள், தமிழ் கலைச்சொற்களோடு வெளியிடப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் மாணவியர்களுக்கென தனி ஓய்வறை கட்டப்படும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. பொன்முடி அறிவித்துள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் தமது துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் 171 கல்லூரிகளில் 8 கோடியே 55 லட்சம் ரூபாய் செலவில் இந்த ஓய்வறைகள் கட்டப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

திருநெல்வேலி, தருமபுரி, ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளில் மின்சார வாகன தொழில்நுட்ப ஆய்வகம் 3 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்றும் திரு. பொன்முடி கூறினார்.

>>>><<<<

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மூன்று நிரந்தர பேரிடர் மீட்பு மற்றும் நிவாரண மையங்கள் 36 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று பேரவையில் பேரிடர் மேலாண்மை துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

இதேபோல், தூத்துக்குடி மாவட்டத்தில் 17 கோடி ரூபாய் செலவில் இரண்டு பல்நோக்கு நிவாரண மையங்கள் ஏற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில், அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்ந்து நடைபெறுவது மீனவர்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறைகளில் 37 மீனவர்கள் உள்ளதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதிக்கு அடுத்த மாதம் 10ஆம் தேதி நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

திமுக, பாமக, நாம் தமிழர் ஆகிய கட்சி வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

மனுக்களை விலக்கிக் கொள்ள நாளை மறுநாள் கடைசி நாள் ஆகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் 13ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

>>>><<<<

கோதுமை கையிருப்புக்கான உச்சவரம்பை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்த உணவுத்துறை செயலர் திரு. சஞ்சீவ் சோப்ரா, கோதுமை வர்த்தகத்தில் ஈடுபடும் மொத்த மற்றும் சில்லரை வியாபாரிகளுக்கு இந்த உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வர்த்தகர்கள் மற்றும் மொத்த வியாபாரிகளுக்கான கோதுமை கையிருப்பு உச்சவரம்பு 3 ஆயிரம் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சில்லறை வியாபாரிகளை பொறுத்தவரை இது 10 டன்னாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கிலும், பதுக்கலை தடுக்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக திரு. சஞ்சீவ் சோப்ரா கூறினார்.

>>>><<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், சில பகுதிகளில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 66 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

நாமக்கல் மாவட்டத்தில் ரத்த தானம் வழங்கிய 47 பேருக்கான பரிசு மற்றும் பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி. உமா வழங்கினார்.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் நவீன கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று வழங்கினார்.

>>>><<<<

அரியலூர் மாவட்டத்தில் குழந்தை தொழிலாளர் முறை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி. ஆனிமேரி ஸ்வர்ணா தொடங்கி வைத்தார்.

>>>><<<<

திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையிலிருந்து பாசனத்திற்காக இன்றுமுதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

>>>><<<<

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில், இந்தியா 4 தங்கம், 2 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

ஜோர்டனின் அம்மானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 46 கிலோ எடைப்பிரிவில் Dipanshi, 53 கிலோ எடைப்பிரிவில் Muskan, 61 கிலோ எடைப்பிரிவில் Rajnita, 69 கிலோ எடைப்பிரிவில் Mansi Lather ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவில் Samarth Gajanan Mhakave-ம் மகளிர் 40 கிலோ எடைப்பிரிவில் Rajbala-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

இதர ஆடவர் பிரிவுகளில் ஆகாஷ், சச்சின் குமார், Bikash Kacchap, Ronak மற்றும் Tushar வெண்கலப்பதக்கம் வென்றனர்.

>>>><<<<

பிரான்ஸில் நடைபெற்ற பாரா வாள் வீச்சுப் போட்டியில் இந்தியாவின் Rakhal Kumar Sethy வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

உலக கோப்பை பாரா வலு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Ashok வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

உலக கோப்பை டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

St. Lucia-வில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

>>>><<<<

Lagos சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sreeja Akula பட்டம் வென்றார்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் வில்வித்தைப் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் பங்கேற்க இந்தியா தகுதி பெற்றுள்ளது.

>>>>END<<<<